# நூல் அறிமுகம்

இந்நூலின் பெயர் "சரஹ் உஸூலுஸ் ஸுன்னா" என்பதாகும். ஆரம்ப காலங்களில் கொள்கை விளக்க நூற்கள் "சரஹுஸ் ஸுன்னா", "உஸூலுஸ் ஸுன்னா" போன்ற பெயர்களிலேயே எழுதப்பட்டுள்ளன.

இந்நூலின் மூல நூல் "உஸூலுஸ் ஸுன்னா" என்பதாகும். இது இமாம் அஹ்மத் பின் ஹன்பல் (ரஹ்) அவர்கள் எழுதியது. ஷேக் அப்துல்லாஹ் பின் அப்துர் ரஹ்மான் அல்ஜப்ரீன் என்பவர் தமது வகுப்புக்களில் இந்நூலுக்கு விளக்கமளித்துள்ளார். அஹ்லுஸ் ஸுன்னா வல்ஜமாஅத்தினுருடைய மூத்த அறிஞர்களில் ஒருவரும், ஸஊதி அரேபியாவின் பத்வாக்குழுவின் சிரேஷ்ட உறுப்பினரும், இமாமd முஹம்மத் பின் ஸுஊத் இஸ்லாமிய பல்கலைக் கழகத்தின் ஓய்வுபெற்ற முதுநிலை விரிவுரையாளர்களில் ஒருவருமாவார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும். இவரது மாணவர்களில் ஒருவரான ஷேக் அலிய் பின் ஹஸன் அபூ லௌஸ் என்பவர் அந்த விளக்கங்களைத் தொகுத்து புத்தக மயப்படுத்தியுள்ளார்.

அது மாத்திரமன்றி கருத்துக்கள் தெளிவாக விளக்கப்படவேண்டிய இடங்களிலும், மேலதிக விபரங்கள் தேவைப்படும்போதும் அடிக்குறிப்புகளைச் சேர்த்துள்ளார். இந்த நூலில் இடம்பெற்றுள்ள ஹதீஸ்களின் அறிவிப்பாளர்கள் மற்றும் அவை பதிவு செய்யப்பட்ட நூற்கள் போன்றவற்றையும் அடையாளப படுத்தியுள்ளார். இவ்வாறு எழுதப்பட்ட அடிக்குறிப்புக்களையும் ஷேக் ஜபரீன் அவர்கள் மறு பரிசீலனை செய்து இந்நூலை வெளியிட அனுமதி வழங்கியுள்ளார்.

புத்தகத்தின் முழுப்பயனும் சமூகத்துக்குச் சென்றடைய வேண்டும் என்பதற்காக ஷேக் ஜபரீன் அவர்களுடைய விளக்கவுரையையும், தொகுப்பாசிரியர் சேர்த்துள்ள அடிக்குறிப்புக்களையும் சேர்த்து இங்கு மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளது.

எனவே, இமாம் அஹ்மத் பின் ஹன்பல் (ரஹ்) அவர்களுடைய மூல நூலும் அதற்கு ஷேக் ஜபரீன் அவர்கள வழங்கிய விளக்கவுரையையும் தொகுப்பாசிரி யரான ஷேக் அலிய் பின் ஹஸன் அபூ லௌஸ் அவர்களுடைய அடிக்குறிப்புகளும் சேர்ந்த தொகுப்பே "சரஹ் உஸூலுஸ் ஸுன்னா" என்ற இந்நூல் ஆகும்.

இமாம் அஹ்மத் (ரஹ்) அவர்களால் எழுதப்பட்ட இந்நூல் பற்றி அபூய:்லா (ரஹ்) அவர்கள் கூறுவதாவது:- "ஒருவர் இந்நூலைத் தேடி சீனா தேசம் சென்றாலும் போதாது".

அர்ப்பண சிந்தனையுடன் பணிபுரிந்த ஸலபுல் ஸாலிஹீன்கள் இறைக் கோட்பாடு (அகீதா), தௌஹீதின் வகைகள், ஈமானின் அடிப்படைகள், அஹ்லுஸ் ஸுன்னாவின் அடிபடைகள் உள்ளிட்ட முக்கியமான விடயங்களைத் தெளிவுபடுத்துவதில் அதிக கவனம் செலுத்தியுள்ளனர். அல்லாஹ் இவர்கள் மூலம் தனது மார்க்கத்தைப் பாதுகாத்தான். இவர்கள் பித்அத்துக்கள், அனாச்சாரங்கள், வழிகேடுகள் போன்றவற்றை சமூகத்துக்கு இனங்காட்டியும் அடையளப்படுத்தியும் உள்ளனர்.

இஸ்லாத்தின் துரிதமான வளர்ச்சி கண்டு சகித்துக் கொள்ள முடியமறபோன இஸ்லாத்தின் எதிரிகள் மார்க்கத்தில் குறைகாணவும் அதில் சந்தேகங்களை ஏற்படுத்தவும் தொடங்கினர். அதே போன்று முஸ்லிம்கள் மத்தியிலேயே இஸ்லாத்தின்மீதான குற்றச் சாட்டுக்களையும் சந்தேகங்களையும் கட்டவிழ்த்துவிட்டனர். இம்முயற்சியில் எதிரிகள் ஓரளவு வெற்றியடைந்துள்ளனர் என்று குறுப்பிடுவதே பொருத்தமானதாகத் தென்படுகிறது.

ஏனெனில், இவர்களுடைய சதிவலையில் அதிகமான முஸ்லிம்கள் சிக்கிக் கொண்டனர். இதன் விளைவாக அல்குர்ஆனிலும் ஹதீஸிலும் தெளிவாகச் சொல்லப்பட்ட பல விடயங்களை மறுக்க ஆரம்பித்தனர். எனவே, இவர்களுக்கு இஸ்லாத்தின் அடிப்படைகளையும் அஹ்லுஸ் ஸுன்னாவின் அடிப்படைகளையும் தெளிவுபடுத்த வேண்டிய கடமை அஹ்லுஸ் ஸுன்னாவின் அறிஞர்கள் மீது இருந்தது.

இஸ்லாத்தின் விரோதிகளுக்குப் பதிலுரைப்பதற்காகவும், முஸ்லிம்களுக்கு அஹ்லுஸ் ஸுன்னாவின் நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்துவதற்காகவும் அவ்வப்போது நூற்கள் எழுதப்பட்டுள்ளன. இவ்வரிசையில் எழுதப்பட்ட நூற்களில் இதுவும் ஒன்று. இவ்வாறு அஹ்லுஸ்ஸுன்னாவின் நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தியவர்களில் இந்நூலாசிரியரின் புதல்வரான இமாம் அப்துல்லாஹ் பின் ஹன்பல் (ரஹ்), இமாம் மர்வஸி(ரஹ்) , இமாம் அல்லாலகாஈ (ரஹ்), இமாம் இப்னு ஜரீர் (ரஹ்) போன்றோர் குறிப்பிடத்தக்கவர்களாவர்.

அஹ்லுஸ் ஸுன்னாவின் அடிப்படைகளிற் சில மிகச் சுருக்கமாகவும், தெளிவாகவும் எழுதப்பட்ட நூற்களில் இதுவும் ஒன்று, இஸ்லாமிய சமூகத்தில்

கருத்து – வேறுபாடுகளும், பிரிவினைகளும், வழிகெட்ட சிந்தனைகளும் அரசியல் செல்வாக்குப் பெற்று அமோக ஆதரவுடன் இருந்த ஹிஜ்ரி மூன்றாம் நூற்றாண்டிலேயே இந்நூல் எழுதப்படுள்ளது.

அன்று வழிகேட்டில் மூழ்கியிருந்த பலர், தாம் சத்தியத்திலே இருப்பதாக வாதாடிக் கொண்டு, சத்தியத்தில் இருந்தவர்களை வழிகேடர்கள் எனக் கூறிக் கொண்டும் இருந்தனர். இதே நிலைதான் இன்றும் தோன்றியுள்ளது.

சிலர் குர்ஆன், ஹதீஸையே தாம் பின்பற்றுவதாகக் கூறிக்கொள்கின்றனர். ஆனால், இவ்விரண்டையும் விடப் பகுத்தறிவுக்கு முன்னுரிமை வழங்கி, வழிதவறிய நிலையில் உள்ளனர். இவர்கள்அகீதா (கொள்கை) ரீதியாக குர்ஆன் ஹதீஸைக் கைவிட்டுவிட்டு, தத்துவ சிந்தனைகளான இல்முல் கலாம், இல்முல் மன்திக் போன்றவை மூலம் அகீதாவை அணுகுகின்ற அஷ்அரீ மற்றும் மாத்ரூதீ இயக்கங்களைச் சார்ந்துள்ளனர். இவ்விருசாராரும் மூ:ஃதஸிலாக்கள் வழிவந்த வழிதவறியவர்களாவர்.

வேறு சிலர், குர்ஆன் மற்றும் ஹதீஸைப் பின்பற்றுவதாகக் கூறிக் கொள்ளும் அதேவேளை இவ்விரண்டையும் நமக்கு அறிவித்துத் தந்த ஸஹாபாக்களுடைய சிறப்புக்கள், இவர்களுக்கு இஸ்லாம் வழங்கியுள்ள அந்தஸ்த்துக்கள் , இவர்களின் முன்மாதிரிகள் போன்ற முக்கியமான அடிப்படைகளை ஏற்க மறுக்கின்றனர். இதனடிப்படையில் ஸலபுஸ் ஸாலிஹீன்களின் வழிமுறைகளைப் பின்பற்றி மார்க்க விடயங்களை அணுகும் சிந்தனைப் போக்கைக் கைவிட்டுவிட்டனர். இதன் விளைவாக, ஜின்கள் மனிதனைத் தீண்டுதல், ஒரு முறை ஸகாத் கொடுக்கப்பட்ட பொருளுக்கு மீண்டும் ஸகாத் வழங்குதல், நபி (ஸல்) அவர்களுக்கு நெஞ்சு பிளக்கப்பட்டு பரிசுத்தப் படுத்தப்பட்டமை, நபி (ஸல்) அவர்களுக்கு சூனியம் செய்யப்பட்டமை போன்ற பல ஆதாரபூர்வமான விடயங்களைப் புறக்கணிக்கின்றனர்.

தற்போது அதிகமானோர் சமகால அறிஞர்களின் நூற்களில் மாத்திரம் தங்கியுள்ளனர். இஸ்லாமிய வரலாற்றுப் பின்னணி எதுவுமின்றி ஸலபுஸ்ஸாலிஹீன்களையும், ஆரம்பகால அறிஞர்களையும் விமர்சிக்கவும் முற்பட்டுவிட்டனர். இதன் விளைவு மிகப் பாரதூரமானதாகும். “தடி எடுத்தவன் எல்லாம் வேட்டைக் காரன்” என்ற நிலை ஏற்பட்டமை மிகவும் வேதனைக்குரியதாகும்.

வேறுசிலர் அல்குர்ஆனையும் , ஹதீஸையும் பின்பற்றுவதாகக் கூறிவருகின்றனர். எனினும் இவ்விரண்டுக்கும் அவர்களுக்குமிடையில் மிக நீண்ட இடைவெளியிருப்பதைக் காணமுடிகின்றது.

இவ்வாறு பல வழிகளிலும் முஸ்லிம்கள் வழிகேட்டில் சிக்கித் தவிப்பதற்கு ஒரு முக்கியமான காரணம் இருக்கிறது. குர்ஆன், ஹதீஸ், ஸலபுஸ்ஸாலிஹீன்களின் வழிமுறைகள் போன்றன சமூகத்திலிருந்து ஓரங்கட்டப்பட்டிருப்பதும், அர்ப்பண சிந்தனையோடு பணிபுரிந்த ஆரம்பகால அறிஞர்களின் நூற்கள் புறக்கணிக்கப்பட்டிருப்பதுமே காரணங்களாகும்.

இவ்வாறான காலகட்டத்தில் இஸ்லாத்தின் கொள்கை விளக்க நூற்கள், அஹ்லுஸ்ஸுன்னாவின் அடிப்படைகள்பற்றி ஆரம்பகால அறிஞர்களால் எழுதப்பட்ட அடிப்படையான நூற்களைத் தமிழில் மொழி பெயர்ப்பது காலத்தின் தேவையும், கற்ற்ற்றிந்த உலமாக்களின் கடமையுமாகும்.

அன்மைக்காலத்தில் கருத்துத் தெளிவும் சீரான முறையில் மதக் கோட்பாடுகளை அணுகுகின்ற முறையும் தோன்ற ஆரம்பித்துள்ளது. அதாவது, குர்ஆன், ஸுன்னா என்பவற்றினதும், ஸலபுஸ் ஸாலிஹீன்களதும் வழிமுறைகளின் ஒளியில் மார்க்க விடயங்களை அணுகுகின்ற முறை தோன்றி அது வேகமாக வளர்ச்சி கண்டு வருவதும் மனதைக் குளிரவைக்கின்றது. இது இறைவனின் நியதியும் ஆகும். ஏனெனில், நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். “சத்தியத்தில் நிலைத்திருக்கும் ஒரு சாரார் எனது உம்மத்தினரிடையே எப்போதும் இருந்துகொண்டே இருப்பர். அவர்களை எதிர்ப்பவர்களால் அவர்களை அழித்தவிட முடியாது. தீனை (இறை நெறியைப்) பாதுகாக்கின்ற இவர்கள் இந்நிலையில் இருக்கும் போதே அல்லாஹ்வின் தீர்ப்பு (மறுமை நாள்) வந்துவிடும். அறிவிப்பவர்: உக்பா பின் ஆமிர் (ரழி), நூல்: முஸ்லிம்: 1924)

அறிவிப்பாளர் தொடர் நெடுகிலும், ஒரு அறிவிப்பாளரையோ, இரு அறிவிப்பாளர்களையோ மூன்று அறிவிப்பாளர்களையோ கொண்ட “ஆஹாத்” வகையைச் சேர்ந்த நபிமொழிகளை, ஹலால், ஹராமுடன் தொடர்பான சட்டக்கலை, நம்பிக்கைக் கோட்பாடுகள் பற்றிய விடயங்களில் ஏற்கக்கூடாது என்று கூறி சில நபிமொழிகளை சிலர் மறுக்கின்றனர். இவர்களில் மத்ஹப் வாதிகள் சிலரும், அஷ்அரீயா மற்றும் மாதுரீதியா இயக்கத்தினரும் அடங்குவர்.

இதன் பின்னணியில் “தஜ்ஜாலின் வருகையை சிலர் மறுக்கின்றனர். அதே நேரம் தஜ்ஜாலின் வருகையை மறுமையின் பெரிய அடையாளங்களில்

ஒன்றாகவும், இதனை நம்புவதும் ஈமானின் அடிப்படைகளில் ஒன்றாகவுமே அஹ்லுஸ்ஸுன்னா வல்ஜமாஅத்தினார் கருதுகின்றனர். ஒரு தனிநபர், அல்லது இருவர், அல்லது மூவர் அறிவிக்கின்ற செய்திகளில், அறிவிப்பாளர்களின் எண்ணிக்கையைக் கருத்திற்கொள்ளாது, அவர்களின் நம்பகத்தன்மையின் அடிப்படையில் செய்தி ஆதாரபூர்வமானதாகக் காணப்பட்டால், இதனை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பது அஹ்லுஸ்ஸுன்னாவின் ஏகோபித்த முடிவாகும். இதனடிப்படையில் நம்பிக்கைக் கோட்பாடுகள், சட்டக்கலை, அமல்களின் சிறப்புக்கள் போன்ற அனைத்துத் துறைகளிலும் ஆதாரபூர்வமான, “ஆஹாத்” வகையைச் சேர்ந்த செய்திகள் சான்றுகளாகக் கொள்ளப்படும்.

இறுதி ஹஜ்ஜின்போது நபி (ஸல்) அவர்களுடன் ஒரு இலட்சத்து இருபத்து நாலாயிரம் நபித்தோழர்கள் கலந்து கொண்டனர். இவ்வளவு பெருந் தொகையிலான ஸஹாபாக்கள் கலந்து கொண்ட பிரபல்யமான நகிழ்ச்சியின் ஆரம்பம் முதல் கடைசி வரையான செய்திகளை ஜாபிர் (ரழி) அவர்களைத் தவிர வேறு யாரும் அறிவிக்கவில்லை. இது “ஆஹாத்” வகையைச் சேர்ந்த ஆதார பூர்வமான செய்திகளில் ஒன்றாகும். ஸஹீஹ் முஸ்லிம் எனும் கிரந்தத்தில் காணப்படுகின்ற மிக நீண்ட ஹதீஸ்களில் இதுவும் ஒன்றாகும். எனவே, இந்நபிமொழியை ஏற்றுக் கொள்கின்றனர். இதேபோல் இம்மியளவும் தரத்தில் குறையாமல், இதே ஹதீஸ் தரத்தில் உள்ள மற்றுமொரு நபிமொழிதான் “தஜ்ஜாலின் வருகை” தொடர்பான செய்தி. எனினும், அவர்கள் இதனை மறுக்கின்றனர்.

“எல்லா அமல்களுக்கும் நிய்யத்தைப் பொறுத்தே கூலி வழங்கப்படுகின்றது” என்ற நபிமொழி ஸஹீஹ் முஸ்லிம் எனும் கிரந்தத்தில் பதிவாகியுள்ளது. இதுவும் “ஆஹாத்” வகையைச் சேர்ந்த , ஆதாரபூர்வமான செய்திகளில் ஒன்றாகும். இதன் அறிவிப்பாளர் உமர் (ரழி) அவர்கள்ஆவார் இந்நபிமொழியை அனைவரும் ஏற்றுக்கொள்கின்றனர்.

அணுவளவும் குறையாமல் ஒரே தரத்தில் காணப்படுகின்ற நபிமொழிகளில் சிலதை ஒதுக்கிவிட்டு மற்றதை நடைமுறைப்படுத்துகின்றனர். எனவே, கோளாறு எங்கோயுள்ளது என்பது சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

இவ்வாறு மனிதர்கள் வழிகேட்டில் வீழ்ந்து தடம் புரண்டு செல்வதற்கான காரணம் சரீஆவின் மூலாதாரங்கள் யாவை? அஹ்லுஸ் ஸுன்னா என்போர் யார்? இவர்களின் அடிப்படைகள் எவை? போன்ற முக்கியமான அம்சங்கள் பற்றிய

அறிவின்மையாகும். எனவே, அஹ்லுஸ்ஸுன்னாவின் அடிப்படைக் கோட்பாடுகள் பற்றித் தெரிவிப்போருகு இந்நூல் ஒரு வழிகாட்டி எனலாம்.

மேலும், இந்நூலில் இமாம் அஹ்மத் (ரஹ்) அவர்கள் புதிதாகத் தோன்றிய சில வழிகெட்ட இயக்கங்களை பெயர்களால் மாத்திரம் அறிமுகப்படுத்திவிட்டுச் செல்கின்றனர். அதேபோன்று இந்நூலின் விரிவுரையாளரான ஷேக் ஜபரீன் அவர்களும் புதிதாகத் தோன்றிய சில வழிகெட்ட இயக்கங்கள் மற்றும் வழி கெட்ட தரீக்காக்களைப் பெயரளவில் அடையாளப்பட்டுத்திவிட்டுச் செல்கின்றனர். இவைபற்றிய விரிவான விளக்கங்கள் எதனையும் இவர்கள் குறிப்படவில்லை. இவைபற்றி இஸ்லாம் மற்றும் இஸ்லாமிய நாகரீக நூல்களில் விரிவாகக் காணலாம். இவ்வாறு சிதறிய சிந்தனைகளால் முஸ்லிம்கள் நிலைதடுமாறிக் கொண்டிருப்பதைக் கண்ட ஸலபுஸ் ஸாலிஹீன்களான இமாம்கள், நபிவழியையும், சரியான அகீதாவையும் அவ்வப்போது தெளிவுபடுத்தி வந்துள்ளனர். இந்த வரிசையில் எழுதப்பட்ட நூற்களில் இதுவும் ஒன்று. இதில் அஹ்லுஸ்ஸுன்னாவின் அடிப்படைகள், மறைமுகமான விடயங்களை நம்புதல், ஈமானுடைய சில அடிப்படைகள் போன்றன குர்ஆன் , ஹதீஸின் ஒளியில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளன. அத்துடன் அஹ்லுஸ்ஸுன்னாவுடன் பித்அத்தவாதிகள் முரண்பட்டுக்கொண்ட சில அம்சங்களும் இதில் எழுதப்பட்டுள்ளன. இவ்வகையில் இது மிகவும் பயனுள்ள நூற்களில் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நூலில் இமாம் அஹ்மத் (ரஹ்) அவர்கள் அஹ்லுஸ்ஸுன்னாவுடைய ஐம்பது அடிப்படைகளை எழுதியுள்ளார். இந்நூலில் இமாம் அஹ்மத் (ரஹ்) கூறுபவைகள் தடித்த எழுத்துக்களால் எழுதப்பட்டுள்ளன. இவைகளுக்கு ஷேக் ஜபரீன் அவர்கள் வழங்கிய விளக்கங்களும், ஷேக் அபூ லைஸ் அவர்கள் எழுதிய அடிக்குறிப்புக்களும் “விளக்கம்” என்ற தலைப்பின் கீழ் காணப்படுகின்றன.

இந்நூலில், ஆட்சித் தலைவருக்குக் கட்டுப்படுவதன் அவசியம், அவருக்கு எதிராகப் போராடும் கவாரிஜ்கள், இவர்கள் விடயத்தில் சரீஅத்தின் நிலைப்பாடு, பெருமாபாவங்கள் மற்றும் அவைகளுக்கான தண்டனைகள் பற்றி இடம்பெற்றுள்ள ஹதீஸ்களை அஹ்லுஸ் ஸுன்னா வல்ஜமாஅத்தினர் கையாளும் முறை, பெரும்பாவிகள் விடயத்தில் முஃதஸிலாக்களின் பிழையான நிலைப்பாடு, பெரும்பாவிகள் விடயத்தில் அஹ்லுஸ் ஸுன்னாவின் சரியான நடுநிலையான நிலைப்பாடு போன்ற அனைத்து விடயங்களும் மிகத் தெளிவாகவும் சுருக்கமாகவும் எழுதப்பட்டுள்ளன. இவை இந்நூலின் சிறப்பம்சமாகும்.

ஆனால், "கூறியது கூறல்" இடம்பெற்றிருப்பதும், பாடங்கள், தலைப்புக்கள் அடிப்படைகள் எழுதப்படாமிலிருப்பதும் இந்நூலில் காணப்படும் குறைபாடுகளில் ஒன்று. எனினும், இதனை முறையான நூலாக்கம் செய்த ஷேக் அலிய் பின் ஹஸன் அபூ லௌஸ் அவர்கள் இந்நூலுக்குப் பொருளடக்கம் எழுதியுள்ளார். இந்தப் புத்தகத்தின் உயரிய பயனை அடைவதற்கு இப்பொருளடக்கம் வழிசெய்யும் என நம்புகிறேன்.

அஹ்லுஸ் ஸுன்னாவின் அடிப்படைகள், கொள்கை விளக்கங்கள் பற்றி அறிந்து கொள்ள விரும்புவோருக்கு இந்நூல் ஒரு வழிகாட்டியாகவும், வழிகேட்டில் சிக்கி இருப்போருக்கு ஒரு படிப்பினையாகவும் அமைய வேண்டுமென அல்லாஹ்விடம் பிரார்த்தனை செய்கிறேன்.

அனைத்து நிறைவுகளுக்கும் சொந்தக்காரன் அல்லாஹ் ஒருவனே! குறை பாடுகளுக்குச் சொந்தக்காரன் மனிதன் ஆவான். அல்லாஹ் யாவற்றையும் மிகவும் அறிந்தவன்!